# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 25 வெள்ளிக்கிழமை 10.05.2024 கதிர் 253



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# பிரச்சினைகளைத் தீர்க்க தேசிய நல்லிணக்க பொறிமுறையே சாத்தியமானதாக இருக்கும்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து




**தமிழ் மக்களின் அபிலாசைகளை தேசிய நல்லிணக்கமே நிறைவேற்றிக் கொடுக்கும். அத்துடன் அதுவே சாத்தியமான வழிமுறையாகவும் உள்ளது, என ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் தீவகத்தின் வேலணை, ஊர்காவற்றுறை நெடுந்தீவு மற்றும் காரைநகர் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள் வட்டாரச் செயலாளர்கள், வட்டார நிர்வாக உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு இன்று வேலணை துறையூர் முருகன் ஆலயப் பொது மண்டபத்தில் நடைபெற்றது.**

2➤

## விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகள் திறக்கப்பட்டன



யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.8 ஏக்கர் காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகள் திறக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர், மேலதிக மாவட்ட காணி செயலாளர் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஆகியோர் கடந்த 7 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பகுதிக்குக் கள விஜயம் மேற்கொண்டு பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடியதற்கு அமைவாக, இரண்டு வீதிகள் திறக்கப்பட்டுள்ளன.

பொன்னாலை - பருத்தித்துறை கடற்கரை வீதியில் பலாலி வடக்கு பாடசாலை வீதியும், விமான நிலைய வீதியில் மருதடி சந்தியிலிருந்து பலாலி நோக்கிச் செல்லும் வீரப்பளை வீதியும் திறக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக விமான நிலைய வீதி ஊடகவும், ஒட்டகப்புலம் பிரதான வீதியூடாகவும் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குச் செல்ல ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வசாவிளான்கிழக்கு(ஜே/244), வசாவிளான் மேற்கு (ஜே/245),

2➤

## நாடாளுமன்ற உறுப்பினராக முஜிபுர் ரஹ்மான் உறுதியேற்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக மொஹமட் முஜிபுர் ரஹ்மான் இன்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

நாடாளுமன்றம்இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போதே சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் முஜிபுர் ரஹ்மான்.

அதன்பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும்

2➤

## சாதாரண தரப் பரீட்சையில் நடந்த முறைகேடுகள்! குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு



தற்போது நடைபெற்று வரும் சாதாரண தரப் பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

கொழும்பில் உள்ள 2 பரீட்சை நிலையங்களிலும், ஹசலக்க பிரதேசத்தில்உள்ள ஒரு பரீட்சை நிலையத்திலும் இந்த முறைகேடுகள்இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2➤

# முதலாம் ஆண்டுக்கான மாணவர்கள் சேர்க்கை குறைந்துள்ளதா என்பதை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை!

## தரவுக் கட்டமைப்பு முறைமை தொடர்பிலும் அதிருப்தி

பாடசாலைகளில்முதலாம்ஆண்டுக்கான மாணவர்கள் சேர்க்கை குறைந்துள்ளதா என்பதை கண்டறிந்து, இரண்டு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு, அரசாங்க கணக்குகள் தொடர்பான குழு பரிந்துரை செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் அமைப்பின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பான அரசாங்க கணக்குக் குழுவில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் அமைப்பின் தற்போதைய செயல்திறன் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள தரவு கட்டமைப்பு முறைமை 2012ம்ஆண்டு தொடங்கப்பட்டாலும், இன்னும் செயல்பாட்டு நிலையை அது எட்டவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 4 ஆண்டுகளாக இந்த நடவடிக்கைகள் முறையாக நடைபெறவில்லை என அரசாங்க கணக்குகள் தொடர்பான குழு அதிருப்தி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெம-39)

## விடுவிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பலாலி வடக்கு (ஜே/254), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி தெற்கு (ஜே/252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.8 ஏக்கர் காணி அண்மையில் விடுவிக்கப்பட்டது.

இங்கு வசித்த 327 குடும்பங்கள் காணி உரிமை கோரி பதிவு செய்துள்ளதுடன், அவர்களில் 171 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தித் துப்பரவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளனர். இந்நிலையில், ஏனைய மக்களும் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி, துப்பரவுப் பணிகளை ஆரம்பிக்க மிக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டப்படுகின்றனர். (அ)

## பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தீவகத்துக்கும் ஈ.பி.டிபிக்கும் இடையே நெருங்கிய தொடர்பும் வரலாறும் உண்டு.

90ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு, நாடாளுமன்ற ஜனநாயகத்தினை பயன்படுத்தி தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வினை காண்பதற்கான பயணத்தினை முன்னெடுத்து வருகின்றேன்.

அதன் ஓர் அங்கமே நாம் இந்த தீவக மண்ணில் மக்களின் கோரிக்கையுடன் கால் பதித்து மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்த செயற்பாடும் அமையும்.

இதே நேரம், நீண்ட காலமாக – ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக தமிழ் மக்களினால் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதியாக நான் இருக்கின்றேன்.

இதற்கு இந்த தீவக மக்களின் பங்களிப்பு அதிகமானதாக இருந்து வருகின்றது.

அதனடிப்படையில், எம்மால் வளர்க்கப்பட்டு வருகின்ற தேசிய நல்லிணக்கம் காரணமாக பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்பட முடிந்தது.

அதேபோன்று எமது மக்களின் வாழ்வாதார எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் இதனைப் பயன்படுத்த முடிகின்றது

அதேபோன்று, எதிர்காலத்திலும் எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஒரு தேசிய நல்லிணக்கப் பொறிமுறையே நடைமுறையில் சாத்தியமானதாக இருக்கும்.

அந்தவகையில், எமது மக்கள் போதிய அரசியல் பலத்தினை எமக்கு வழங்குவார்களாயின், எமது மக்களின் அபிவிருத்தியை மட்டுமல்லாது அரசியல் அபிலாசைகளையும் எம்மால் பெற்றுத்தர முடியும் என்ற யதார்த்தத்தையும் எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும், என்று தெரிவித்தார்.

அதேவேளை, மக்களுக்குச் சரியான வழியைக் காட்டுவதாகவும் மக்கள் மத்தியில் காணப்படும் குழப்பங்களுக்குச் சரியான தெளிவினை ஏற்படுத்துவதாகவும் கட்சியின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

எனைய கட்சிகள் போன்று இழுபட்டுச் செல்லும் வகையில் ஈ.பி.டி.பி. கட்சியின் செயற்பாடுகள் இருக்கக் கூடாது என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். (O1)

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த டயனா கமகேயின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி 2024ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அந்தக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக முஜிபுர் ரஹ்மான் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குக் கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்த முஜிபுர் ரஹ்மான், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக 2023 ஜனவரி 20ஆம் திகதி தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். (அ)

## சாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரீட்சைக்குத் தோற்றியவர்கள், நேற்று வழங்கப்பட்ட ஆங்கில வினாத்தாளை கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி புகைப்படம் எடுத்து, அனுப்பி விடை பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த நேரத்தில் பரீட்சை நிலையங்களில் இருந்த அதிகாரிகள் இந்தக் கையடக்கத் தொலைபேசிகளைக் கைப்பற்றியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார். (04)

# தேயிலைத் தோட்டங்களுக்கு வழங்கப்படும் உர மானியம் அதிகரிக்கப்படும் என தகவல்!



தேயிலைத் தோட்டங்களுக்கு தற்போது வழங்கப்படும் உர மானியத்தை அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் தேயிலை உற்பத்தியாளர்கள் சங்கம், இலங்கைத் தேயிலைச் சபையின் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 10 ஏக்கருக்கு மாத்திரமே இந்த உர மானியம் வழங்கப்பட்டு வந்தநிலையில், எதிர்வரும் காலங்களில் அதனை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

அதனடிப்படையில், இந்த உர மானியத்தை 10 ஏக்கரில் இருந்து 50 ஏக்கர் வரை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (04)

# வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துதல் குறித்து கலந்தாலோசனை



வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துதல் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்று வாகன இறக்குமதியாளர்களால் தனக்கு வழங்கப்படவுள்ளதாகவும், வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துதல் குறித்தான விரிவான விபரங்கள் அந்த அறிக்கையில் அடங்கும் என எதிர்பார்ப்பதாகவும் நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டி தெரிவித்தார்.

வாகன இறக்குமதித் துறையில் நிபுணத்துவம் மிக்கவர்களால் இந்த அறிக்கை தயாரிக்கப்படுவதால், வாகன இறக்குமதியை மீண்டும் ஆரம்பித்தல் தொடர்பில் குறிப்பிடத்தக்க பிரதிபலிப்பை அது ஏற்படுத்தும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தினருக்கும் இராஜாங்க அமைச்சருக்குமிடையே கலந்துரையாடலொன்று நிதி அமைச்சு காரியாலயத்தில் இடம்பெற்றுள்ளதுடன்,

இதன் போது அனைத்து வகை வாகனங்களையும் ஒரே தடவையில் இறக்குமதி செய்யாமல் பல்வேறு பிரிவுகளிலும் கட்டம் கட்டமாக வானங்களை இறக்குமதி செய்வதே உசிதமானதாக இருக்கும் என மேற்படி சங்கத்தினர் அங்கு தெரிவித்துள்ளனர். அதன்படி, பொது போக்குவரத்து வாகனங்கள், பாவித்த வாகனங்கள், தனிப்பட்ட வாகனங்கள் என கட்டம் கட்டமாக இறக்குமதிக்கு அனுமதி வழங்குவதே பொருத்தமாக இருக்கும் எனவும் சங்கத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ரம-42)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடாத்தும் போட்டிகள்!















# 'முயற்சியே முதற்படி!'

## இசைத்துறையில் வளரும் இசையமைப்பாளர் ரெக்ஸி



பேட்டி கண்டவர் -
நத்தாஷா ஸ்டீபன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





இலங்கை இசைத்துறையானது பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றது என்பது நாம் அறிந்ததே. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இசைத் துறையில் வளர்ச்சி பெற்றுவரும் இசையமைப்பாளர் ரெக்ஸி அவர்களுடனான நேர்காணலே இது.

நத்தாஷா – உங்களை இசைத் துறைக்கு ஈர்த்தது எது? நீங்கள் எப்படி இத்துறையில் உங்கள் பயணத்தை ஆரம்பித்தீர்கள்?

ரெக்ஸி – இத்துறைக்கு வருவதற்கான முதன்மையான காரணம் இசையின் மீதுள்ள காதல் எனலாம்.

பாடசாலைப் பருவம் முதலே இவ்வாறான தொகுப்புகளில் இருந்த ஆர்வம், தொலைக்காட்சிகளில் காணக்கிடைத்த பாடல்கள் மற்றும் பாடசாலையில் நண்பர்களோடு இணைந்து பாடல்கள் பாடிய தருணங்கள் என்பனவே நான் ஓர் இசையமைப்பாளராக வருவதற்குக் காரணமாக அமைந்தன.



என்னுடைய இசைத் துறையின் ஆரம்பத்தில் வெளிவந்த ஹிப் ஹொப் தமிழாவின் திரைப்படமான மீசையை முறுக்கு என்ற திரைப்படமானது என்னுடைய வாழ்வியலோடு ஒத்த தன்மையைக் கொண்டதாக அமைந்தது. அப்படம் புதிய சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ளவும் உதவியாக அமைந்தது.

ஆரம்பத்தில் இசை தொடர்பான எந்த பெரிதான அறிவும் இன்றி இதனைத் தொடங்குவது சவாலாக இருந்தாலும், இசையின் பால் கொண்ட ஈர்ப்பினால் சிறிது சிறிதாக இசையைக் கற்றுக் கொண்டேன்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் என்னுடைய நண்பன் தார்மீகனைச் சந்தித்தேன். அவர் பாடுவதில் திறமை மிக்கவர். இவ்வாறு இருவரும் இணைந்து வலையொளியில் (யுட்டியூப்) காணொளிகளைப் பார்த்துக் கற்று, எங்களுடைய முதலாவது படைப்பை வெளியிட்டோம். அதன்பின் ஒவ்வொரு படைப்புக்களாக உருவாக்கி வருகின்றேன்.

நத்தாஷா – இந்த இசைப்பயணத்தில் இசையமைப்பாளராக நீங்கள் என்னென்ன சவால்களை எதிர்கொண்டீர்கள்? அவற்றை எவ்வாறு சமாளித்தீர்கள்?

ரெக்ஸி –என்னுடைய இசைப்பயணமானது 2015 ஆம் ஆண்டு தொடங்கியது. சுமார் 14 வருடங்களாக அப்பயணம் இன்று வரையிலும் நீடித்துக் கொண்டிருக்கின்றது. இப்பயணத்தில் நான் முகம் கொடுத்த சவால்கள் ஏராளம். எங்களுடைய படைப்புக்களை நாங்கள் உருவாக்கி வெளியிடும்போது அதற்கான சரியான வரவேற்பும் அங்கீகாரமும் கிடைக்கவில்லை. எங்கள் படைப்புக்கான ஆதரவை வழங்கவும் அதனைப் பகிரவும் கூட யாரும் முன் வரவில்லை. பிரசித்தி பெற்றவர்களின் படைப்புக்களை வெளியிடத் தயாராக இருந்த ஒரு சில ஊடகங்கள் எங்களைப் போன்று ஆரம்ப நிலையில் இருந்த கலைஞர்களின் படைப்புக்களை ஏற்று பதில் அளிப்பது கூட மிகவும் அரிதாக இருந்தது.

நான் முகம் கொடுத்த இன்னுமொரு சவால் என்றால், அது சரியான வளமின்மையும், பொருளாதாரச் சிக்கலுமே. ஒரு படைப்பை உருவாக்குவதற்கு பொருளாதார ரீதியான செலவுகள் அதிகமுள்ளன. ஒளி, ஒலி அமைப்புக்களுக்குத் தேவையான பொருட்களும் என்னிடம் இருக்கவில்லை. இருந்தாலும் இசையின் மீது இருந்த காதலால் என்னிடமிருந்த ஒரு சிறிய மடிக்கணினி மூலம் செயலிகளைத் தரவிறக்கம் செய்து அதன் மூலம் பயிற்சிகள் பெற்று பாடல்களைத் தயார் செய்து வெளியிட்டேன்.

இவ்வாறு வருகின்ற ஒவ்வொரு புதிய விடயங்களையும் நானாகவே முன்வந்து கற்று விடாமுயற்சியோடு எனது இசைப்பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன்.

நத்தாஷா – நீங்கள் இசையமைக்கும்போது எந்த வகையான இசை அமைப்புகளை அல்லது இசைப் பாணியைக் கையாளுகின்றீர்கள்?

ரெக்ஸி – சர்வதேச ரீதியாக புகழ்பெற்ற ஆலன் வாக்கர் என்பவரின் ஈ டி எம் முறையினையினையே நான் என்னுடைய இசையமைப்பிலும் பின்பற்றுகின்றேன். இந்த முறையினைப் பயன்படுத்தித்தான் ஒரு பாடலை உருவாக்கி, அந்த பாடலின் இடையில் சொல்லிசை வருவது போல இசையமைத்து என்னுடைய படைப்புக்களை வெளியிடுகின்றேன். அது மாத்திரமின்றி மெல்லிசைப் பாடல்களையும் இப்போது உருவாக்கி வருகின்றேன்.

நத்தாஷா – இதுவரையிலும் உங்களிடமிருந்து எத்தனை படைப்புகள் வெளிவந்திருக்கின்றன? உங்களின் படைப்புகளில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?

ரெக்ஸி – என்னுடைய படைப்புக்களின் வரிசையில் பத்திற்கும் மேற்பட்ட காதல் பாடல்களுக்கு நான் இசையமைத்துள்ளேன். மேலும், சமய ரீதியாக ஐந்து கிறிஸ்தவ மதப் பாடல்களுக்கும் ஒரு இந்து மதப் பாடலுக்கும் இசையமைத்திருக்கின்றேன்.

என்னுடைய இசையமைப்பில் வந்த எல்லாப் பாடல்களும் எனக்கு மிகவும் பிடித்தவைதான். அவற்றுள் எனக்கு மிகவும் நெருக்கமான பாடல் எனும்போது என்னுடைய முதல் பாடலைத்தான் கூற முடியும். ஏனென்றால் அந்தப் பாடலின் மூலமே என்னாலும் இசையமைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குப் பிறந்தது.

அதுமட்டுமல்லாமல் நிறைய விடயங்களையும் அதிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருந்து. என்னைப் பொறுத்தமட்டிலும் என்னுடைய முதலாவது பாடல் என்றுமே மறக்க முடியாததாகும்.

நத்தாஷா – உங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் அல்லது வெளிவரவிருக்கும் படைப்புகள் ஏதேனும் உள்ளனவா?

ரெக்ஸி – தற்போது இரண்டு பாடல்களுக்கு இசையமைத்துள்ளேன். அவை மிகக் கூடிய சீக்கிரமே வெளிவரும். மேலும் இரண்டு திரைப்படங்களுக்கான தயாரிப்பையும் மேற்கொண்டு வருகின்றேன். அவற்றை வெளியிடும் நேரம் நான் சமூக வலைத்தளங்களின் மூலம் அறியப்படுத்துவேன்.

நத்தாஷா – இசைத்துறையில் இசைக் கல்வியின் முக்கியத்துவம் குறித்து உங்களுடைய கருத்து என்ன?

ரெக்ஸி – உலகையாளும் பல்வேறு விடயங்களில் இசையும் ஒன்று. இசையின்றிய ஒரு வாழ்க்கையை யாரும் வாழ்ந்திருக்க மாட்டார்கள் – வாழவும் முடியாது. இசைத் துறையில் சாதிக்க வேண்டும் என்றால் இசைக் கல்வியைக் கற்றிருப்பது நல்லது. அடுத்தடுத்த கட்டங்களை நோக்கிச் செல்வதற்கு பூரண அறிவும் கற்றலும் அவசியமாகும்.

சிறு வயதிலிருந்து இசை ஞானம் இல்லாதவர் இத்துறைக்கு வந்ததன் பின்னர் இது தொடர்பான கற்றல் தெளிவு, அறிவு இல்லாவிடில் அடுத்த கட்ட நகர்வை நோக்கிச் செல்வது மிகக் கடினமாகும். ஒவ்வொரு நுணுக்கமான விடயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் துறைசார்ந்த கல்வி அவசியமானதாகும்.

நத்தாஷா – நீங்கள் இசையமைப்பாளர் என்பதைத் தாண்டி இப்போது விளையாட்டுப்பயிற்றுவிப்பாளராகவும் இருக்கின்றீர்கள். இந்த இரு துறையிலும் நீங்கள் முக்கியமானது என கருதும் துறை எது?

ரெக்ஸி – எனக்குப் பிடித்த துறை என்றால் அது இசைத்துறை தான். இசைத்துறையில் சாதிக்க வேண்டும் என்பது எக்காலத்திலும் என்னோடு இருந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், முக்கியத்துவம் என்று கூறும்போது எனது விளையாட்டுத் துறையைத்தான் நான் கூறுவேன். ஏனென்றால், நிறையப் பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் வீரர்களின் எதிர்காலம் என்னுடைய கையில் இருப்பதால் அதற்கான முக்கியத்துவத்தினை நான் இப்போது வழங்கி வருகின்றேன்.

நத்தாஷா – வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு நீங்கள் கூறுவது?

ரெக்ஸி – வாய்ப்புக்கள் எம்மைத் தேடி வரும், வாய்ப்புக்களை நாம் தேடிச் செல்ல வேண்டும் என்பதைத் தாண்டி, வாய்ப்புகளை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள். இப்பொழுது தொழிநுட்ப வளர்ச்சியானது அதிகரித்த வண்ணமுள்ளது. அதனை இவ்வாறான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தி, இதன் மூலம் உங்கள் அறிவினை விருத்தி செய்யுங்கள்.

ஆரம்பிக்கும்போது சில விடயங்கள் கடினமாகத்தான் இருக்கும். அதுதான் நம்முடைய வாழ்க்கையை முன்னோக்கிச் செல்லப் பல பாடங்களைக் கற்றுக் கொடுக்கும். முதலாவது அடியை எடுத்து வைக்க என்றும் யோசிக்காதீர்கள். அது வெற்றியோ – தோல்வியோ – அதனை ஏற்றுக்கொள்ளுங்கள். அது உங்களது அடுத்தடுத்த படைப்புகளுக்கு புதிய சிந்தனைகளையும் வழிமுறைகளையும் எமக்குக் கற்றுத் தருவதோடு சிறந்த அனுபவத்தையும் தன்னம்பிக்கையையும் தரும்.

நத்தாஷா – இசைத் துறையில் புதிய மேம்பாடுகள் மற்றும் தொழிநுட்பங்களுடன் நீங்கள் எவ்வாறு புதுப்பித்த நிலையில் இருக்கிறீர்கள்?

ரெக்ஸி – நான் என்னுடைய இசைப் பயணத்தை ஆரம்பித்து 14 வருடங்களாகின்றன. என்னுடைய பயணம் ஆரம்பிக்கும்போது இருந்த தொழிநுட்ப வளர்ச்சிக்கும் இப்போது இருப்பவற்றுக்கும் பாரியளவான வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஆரம்பத்தில் எந்தக் கருவிகளும் இல்லாத நிலையில்தான் நான் என்னுடைய பயணத்தை ஆரம்பித்தேன். என்னுடைய தேடலினாலும் பயிற்சியினாலும் இன்று பல பாடல்களை உருவாக்குகின்றேன். இவ்வாறு காலத்திற்கேற்றாற்போல் தொழிநுட்ப ரீதியான மாற்றங்களையும் ஏற்றுக்கொண்டு, அதற்குப் பழக்கப்பட்டும் வருகின்றேன்.

ஒரு சில விடயங்கள் தெரியாத நிலையில் இருக்கும்போது வலையொலி காணொளிகளைப் பார்த்துக் கற்றுக்கொள்வேன். எம்முடைய வெற்றிகள் எங்களுடைய முயற்சிகளில் தான் இருக்கின்றன!

# இணுவில் மக்லியோட் வைத்தியசாலையில் புதிய விடுதித் தொகுதி இன்று திறந்துவைப்பு





126 வருடம் பழமை வாய்ந்த இணுவில் மக்லியோட் வைத்தியசாலையில் புகழ்பெற்ற மகப்பேற்று வைத்தியர் டொக்டர் கெங்கம்மா அவர்களின் ஞாபகார்த்தமாக புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று, மருத்துவ, சத்திர சிகிச்சை விடுதித் தொகுதி இன்று காலை திறந்தது வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு சிறுவர், குழந்தைகள் சத்திரசிகிச்சை நிபுணர் பா.சயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

இக்கட்டிடத் தொகுதியானது, வைத்திய நிபுணர் பா.சயந்தன் மற்றும் அவரது பாரியார் கிருபாளினி ஆகியோரது சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பத்மதயாளன், சத்திரசிகிச்சை பேராசிரியர் வைத்திய நிபுணர் எஸ்.ரவிராஜ் ஆகியோரும் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக மகப்பேற்று வைத்திய நிபுணர்களான ஜெ.கஜேந்திரன், என்.சரவணபவ, வை.சிவாகரன், ஆர்.துவாரதீபன் ஆகியோரும், விசேட அதிதியாக இலங்கை நிர்வாக சேவையின் உயரதிகாரி பொ.பிறேமினியும் கலந்து சிறப்பித்தனர்.

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு 45 லட்சம் ரூபா உபகரணங்கள் கையளிப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில்ஆதார வைத்தியசாலைக்கு 45 லட்சம் ரூபாய் பெறுமதியான வைத்திய உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

திருக்கோவில் ஆதாரவைத்தியசாலை யின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏபி. மசூத் தலைமையில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகிலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவற்றை வழங்கி வைத்தார்.

ECG mechine> portable ventilator> BP monitor> pulse oxymetry போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அச்சமயம் வைத்தியசாலை அபி விருத்திக் குழுவினரும் அங்கு சமுகமளித்திருந்தனர்.






# சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா இன்று காலமானார்!



(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர். எஸ் எம் எம். உமர் மௌலானா இன்று வெள்ளிக்கிழமை காலமானார் .

மருதமுனையைச் சேர்ந்த பணிப்பாளர் உமர் மௌலானா, திடீர் சுகவீனமுற்று கடந்த ஒரு சில தினங்களாக கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளை யில் இன்று மதியவேளையில் கால மானார்.

டாக்டர் உமர் மௌலானா 1984 இல் ஆசிரியராக நியமனம் பெற்று, அதிபராகி, பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி வந்தார்.

2007 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இவர் இணைந்து கொண்டார். மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் அதிபராக சேவையாற்றி, சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் ஒன்பதாவது பணிப்பாளராக 2023 இல் இணைந்தார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் தனது 60 ஆவது வயதில் அவர் ஓய்வு பெறவிருந்தார்.

# மின்சார விளையாட்டுப் பொருட்கள் குழந்தைகளுக்கு எமனாக மாறலாம்!

## மருத்துவ நிபுணர் பாலித ராஜபக்ஷ எச்சரிக்கை!

சந்தையில் இருந்து கொள்வனவு செய்யப்படும் பட்டரி மூலம் இயக்கப்படும் பொம்மைகளுடன் ஆபத்தையும் வீட்டிற்கு கொண்டு வருகிறார்கள் என மருத்துவர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

பதுளை போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் தலைவரும், அரச வைத்தியர் சங்கத்தின் உதவிச் செயலாளருமான மருத்துவர் பாலித ராஜபக்ஷ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பட்டரியில் இயங்கும் பொம்மைகளில் லித்தியம், சில்வர் ஒக்சைட் மற்றும் அல்கலைன் பட்டன் ஆகியன உள்ளன.

வீட்டில் இருக்கும் இதுபோன்ற பழைய பட்டரிகள் சில சமயங்களில் பெரியவர்களுக்குத் தெரியாமல் குழந்தைகளால் விழுங்கப்படலாம். காது அல்லது மூக்கில் நுழைத்துக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

குழந்தைகளால் விழுங்கப்பட்டால், இந்த பட்டரி அதன் மின் இரசாயனவியல் செயல்பாட்டின் மூலம் ஆபத்தை விளைவிக்கக்கூடும்.

உணவுக்குழாயின் முதல் பகுதி இயற்கையாகவே குறுகலாக இருப்பதால், இவற்றினை விழுங்கும் போது அதிக சேதத்தை ஏற்படுத்தும். மேலும் விழுங்கப்பட்ட பட்டரி வயிறு வரை சென்று கடுமையான சேதத்தை உண்டாக்கும்.

அதற்கமைய, உணவுக்குழாயில் துளையேற்பட்டு, குரல்வளை மற்றும் முக்கிய இரத்த நாளங்களில்கூட துளையிடலாம். இது தவிர, வயிற்றிற்குக்கூட ஆபத்தான சேதத்தை ஏற்படுத்தலாம். மூச்சுக்குழாயில் அடைப்பு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தாக மாறலாம்.

ஒரு குழந்தை இந்த துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையை எதிர்கொண்டால், குழந்தையை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

அதுவரை குழந்தைக்கு 10 நிமிடங்களுக்கு ஒருமுறை 2 தேக்கரண்டி சுத்தமான தேனைக் கொடுப்பதுதான் முதலுதவியாக இருக்கும், என மருத்துவர் பாலித ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.



# இலவசமாக மரக்கறிகள் வழங்கிய தன்சல் மக்கள் குவிந்ததால் போக்குவரத்து நெரிசல்



மஹறகம பன்னிபிட்டிய பிரதேசத்தில் சுமார் 20,000 பேருக்கு இலவச மரக்கறிகள் வழங்கும் காய்கறி தன்சல் ஒன்று நடைபெற்றமையால் திடீரென குவிந்த பெருந்தொகை மக்களால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகொட பொருளாதார நிலையம் உட்பட பல இடங்களிலுமுள்ள மரக்கறி வியாபார நிலையங்கள் மற்றும் வியாபார ஸ்தலங்களின் உரிமையாளரான ஆனந்த விஜேரத்ன என்பவரால் இந்த மரக்கறி தன்சல் வழங்கப்பட்டது.

இலவச மரக்கறிகளை பெறுவதற்காக இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு மக்கள் வீதியோரங்களில் வரிசையில் காத்திருந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட மரக்கறி தன்சல் நேற்றுக் காலை 11 மணி வரை வழங்கப்பட்டுள்ளது.

16 வகையான காய்கறிகள் அடங்கிய பொதிகள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட தாகத் தெரியவந்துள்ளது.






# கல்வி சாரா ஊழியர்கள் போராட்டம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம் ஆதரவு தெரிவிப்பு



(எம்.எப்.எம்.நவாஸ்)

கல்வி சாரா ஊழியர்களின் நியாயமான தொழிற் சங்க போராட்டத்திற்கு தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆதரவுக் கரம் நீட்டுவதாக தென் கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின்செயலாளர் எம்.ஏ.ஏ.எம். சமீம் அறிவித்துள்ளார்.

சம்பள உயர்வு மற்றும் ஏனைய வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி 8வது நாளாகவும் நடைபெற்று வருகின்ற தொடர்ச்சியான வேலை நிறுத்த போராட்டங்களினால் பல்கலைக்கழகத்தில் கல்வி மற்றும் ஏனைய ஆய்வு கூட செயல்பாடுகள் முடக்கப்பட்ட நிலையில், பல்கலைக்கழக மாணவர் சமூகம் மிகுந்த பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது.

இருந்த போதிலும் கடந்த எட்டு வருடங்களாக அரசாங்கத்தினால் வாக்களிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற கல்வி சாரா உத்தியோகத்தர்களில் சம்பள முரண்பாடு மற்றும் ஏனைய மாதாந்த படி அதிகரிப்பு போன்ற விடயங்கள் உடன் தீர்க்கப்பட வேண்டும் என்றும், பல்கலைக்கழக சூழலை வினைத்திறன் மிக்க சூழலாக மாற்றி கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுக்கு பக்கபலமாக தொழிற்படுகின்ற கல்வி சாரா உத்தியோத்தர்களின் நீண்ட கால குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும், அரசாங்கம் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுத்து இந்த விடயங்களை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின்செயலாளர் எம்.ஏ.ஏ.எம். சமீம் தெரிவித்தார்.

மேலும் பல்கலைக்கழகங்களை பொறுத்தமட்டில் கல்வி சாரா ஆளணியினர் பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் தொடங்கி ஏனைய கல்வி சார்ந்த நடவடிக்கைகளுக்கு பக்கபலமாகவும் பல்கலைக்கழகத்தின் உயர்வுகளுக்கும்அதன்வினைத்திறன் மிக்க சேவைகளுக்கும் மாணவர்கள் தொடக்கம் ஆசிரிய சமூகம் வரை தங்களது அயராத பங்களிப்புகளை வழங்கி வருகின்ற இந்த வேளையில், ஏனைய அரசுத்துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்புகள் இதுவரை காலமும் இவர்களுக்கு மறுக்கப்பட்ட நிலையில் அவர்களது கோரிக்கையை முன்னுறுத்தி கடந்து எட்டு வருடங்களாக மேற்கொள்ளப்படுகின்ற தொடர்ச்சியான இந்தப் போராட்டம் அரசாங்கத்தின் உயர்மட்டங்களின் கவனத்திற்கு செல்லப்பட்டு உடனடியாக அவர்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏகோபித்த தீர்மானத்தை வழிமொழிந்தவராக அரசாங்கம் இவ்விடத்தில் உடன் கரிசனை காட்டப்பட வேண்டும் என்றும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் எம்.ஏ.எம். சமீம் குறிப்பிட்டார்.

# முதலாவது ஹஜ் யாத்திரைக் குழு சவுதியைச் சென்று அடைந்தது





(அஸ்ஹர் இப்றாஹிம்)

இம்முறை இஸ்லாத்தின் இறுதிக் கடமையான புனித ஹஜ் கடமையக நிறைவேற்றுவதற்காக இந்தியா, பங்களாதேஷ், துருக்கி, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து முதல் யாத்திரிகர் குழு ஜித்தா மற்றும் மதீனா முனவ்வரா நகர சர்வதேச விமான நிலையத்தை நேற்றையதினம் சென்றடைந்தனர்.

அவர்களுக்கு ஈச்சம்பழம் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டு உற்சாகமாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உலகின்பல்வேறு நாடுகரிலிருந்தும்இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா மற்றும் மதீனாவுக்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய பின்னர் ஜூன் மாதம் 17 ஆம் திகதி புனித ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளை உலக முஸ்லீம்கள் கொண்டாட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொத்துவில் வைத்தியசாலைக்கு விஜயம்



(எம்.எம்.ஜெஸ்மின்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீனும் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிரும் பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது வைத்தியசாலைகளின் விடுதி உள்ளிட்ட ஏனைய பிரிவுகளுக்கும் சென்று பார்வையிட்ட பணிப்பாளர், அவ்வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள், தேவைகள் குறித்தும் வைத்திய அத்தியட்சகர் டொக்டர். ஏ.பி.மசூத்திடம் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் வசதிகளைக் கொண்ட விடுதியை நிறுவுதல் தொடர்பாகவும் கலந்துரையாடிய பணிப்பாளர், அதற்குரிய இடங்களையும் பார்வையிட்டார்.




## சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை நாளை காலை ஆரம்பமாகிறது

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய ஆடிவேல் விழாவினை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கிய இலங்கையின் மிக நீண்ட பாத யாத்திரை நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஜெயாவேல்சாமி தலைமையில் ஆரம்பமாகவிருக்கிறது.

செல்வச் சந்நிதி ஆலய பிரதமகுரு சிவ ஸ்ரீ சாரங்கன் குருக்களின் தலைமையில் விசேட பூசை காலை 6 மணிக்கு இடம்பெற்று, சாரங்கன் குருக்கள் பிரதான வேலை பாதயாத்திரைக் குழுத் தலைவர் ஜெயா வேல்சாமியிடம் வழங்கி வழியனுப்பி வைக்கவிருக்கிறார்.

பாதயாத்திரைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி அடைந்துள்ளதாகவும் சுமார் 60 யாத்திரிகர்கள் இணைந்து கொள்ளவிருப்பதாகவும் பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.

யாத்திரைக. குழுவினர் நாளை சனிக்கிழமை பகல் ஆவரங்கால் சென்று இரவு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் தங்குவார்கள்.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனறாகல ஆகிய 7 மாவட்டங்களையும்இணைத்து, 55 நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப்புனித பாதயாத்திரை, இலங்கையின் மிகமிகநீண்ட தூர கதிர்காம பாதயாத்திரையாகக் கருதப்படுகின்றது.

சந்நதி கதிர்காம்ப் பாதயாத்திரைக் குழுவின் ஏற்பாட்டில் 23 ஆவது வருடமாக இப்பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றமை குறிபபிடத்தக்கது.

# ஜேரைட்
# JRIDE

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

## TAXI APP FROM JAFFNA

இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



**வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!**
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

**JRIDE TAXI APP**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.05.2024இல் வெளியிடப்பெற்றது.